கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திரு.கட்டா ரவி தேஜா,இ.ஆ.ப.,

திருவள்ளுவர் ஆண்டு 2057/ பராபவ / ஐப்பசி –

ந.க.எண்.31/2026/எம்சி6 நாள். .10.2026

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் தகவல் வழங்குதல் – உதவி பொது தகவல் அலுவலர்கள், பொது தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களை நியமித்து திருத்திய உத்தரவு பிறப்பித்தல் – தொடர்பாக.

ஆணை:

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள பகுதி மக்களுக்கு மாநகராட்சி சார்பாக பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல் , குடிநீர் வழங்குதல், நகரை தூய்மையாக பராமரித்தல், சொத்து வரிவிதித்தல் மற்றும் பெயர் மாற்றம் செய்தல் என பல்வேறு சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பல்வேறு விண்ணப்பங்கள் மற்றும் கோரிக்கை எழுந்த வண்ணமே உள்ளது. தற்பொழுது கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைமுறையில் உள்ள 13 பொது தகவல் அலுவலர்கள் மற்றும் 1 மேல்முறையீட்டு அலுவலர்கள் 2008 ஆண்டு நியமனம் செய்யப்பட்டு இன்று வரை தொடர்கிறது.

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சியில் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் நகரமயமாதல் முன்பை விட மிக வேகமாக முன்னேறி வருகிறது. எனவே இதன் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களுக்கு மிக விரைவாக சேவை புரிய வேண்டியுள்ளதால், கோயம்புத்தூர் மாநகராட்சியில் தேர்தல் பணிகள், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் மற்றும் இதர பணிக்களினால் அலுவலக பணிச்சுமை அதிகளவில் உள்ளதாலும், தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 கீழ் பொது மக்களிடம் இருந்து அதிகளவில் மனுக்கள் பெறப்படுவதாலும், பொது மக்களுக்கு தகவல்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தகவல் வழங்கிட ஏதுவாக கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு மண்டல அலுவலகத்திற்கும் தனியாக உதவி பொது தகவல் அலுவலர்கள், பொது தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் மற்றும் பிரதான அலுவலத்திற்கு உதவி பொது தகவல் அலுவலர்கள், பொது தகவல் அலுவலர்கள் மற்றும் 2 மேல்முறையீட்டு அலுவலர்களை கீழ்க்கண்டவாறு நியமித்து உத்தரவு பிறப்பிக்கலாம்.

பிரிவு / அலுவலகம்	உதவி பொது தகவல் அலுவலர்	பொது தகவல் அலுவலர்	மேல்முறையீட்டு அலுவலர்
பொதுப்பிரிவு	கண்காணிப்பாளர் (பொதுப்பிரிவு) பிரதான அலுவலகம்,	உதவி ஆணையாளர் (நிர்வாகம்) பிரதான அலுவலகம்,	துணை ஆணையாளர் – I
பொதுகணக்கு பிரிவு	கணக்கு அலுவலர், பிரதான அலுவலகம்,	உதவி ஆணையாளர் (கணக்குகள்) பிரதான அலுவலகம்,	
நகரமைப்பு பிரிவு	கண்காணிப்பாளர் (நகரமைப்பு பிரிவு)	நகரத்திட்டமிடுநர் பிரதான அலுவலகம்,	
மாமன்ற பிரிவு	–	மாமன்ற செயலாளர் பிரதான அலுவலகம்,	

Scanned with OKEN Scanner

வருவாய் பிரிவு	வருவாய் அலுவலர், பிரதான அலுவலகம்,	உதவி ஆணையாளர் (வருவாய்) பிரதான அலுவலகம்,	துணை ஆணையாளர் – II
பொறியியல் பிரிவு	கண்காணிப்பாளர், (பொறியியல் பிரிவு) பிரதான அலுவலகம்,	துணை மாநகரப் பொறியாளர், பிரதான அலுவலகம்,	
பொதுசுகாதார பிரிவு	கண்காணிப்பாளர் (பொதுசுகாதாரப் பிரிவு) பிரதான அலுவலகம்,	மாநகர நல அலுவலர் பிரதான அலுவலகம்,	
கல்விப்பிரிவு	மேற்பார்வையாளர் (கல்விப்பிரிவு) பிரதான அலுவலகம்,	மாநகர கல்வி அலுவலர் பிரதான அலுவலகம்,	
கிழக்கு மண்டலம்	கண்காணிப்பாளர் (கிழக்கு மண்டலம்)	நிர்வாக அலுவலர் (கிழக்கு மண்டலம்)	உதவி ஆணையாளர் (கிழக்கு மண்டலம்)
மேற்கு மண்டலம்	கண்காணிப்பாளர் (மேற்கு மண்டலம்)	நிர்வாக அலுவலர் (மேற்கு மண்டலம்)	உதவி ஆணையாளர் (மேற்கு மண்டலம்)
வடக்கு மண்டலம்	கண்காணிப்பாளர் (வடக்கு மண்டலம்)	நிர்வாக அலுவலர் (வடக்கு மண்டலம்)	உதவி ஆணையாளர் (வடக்கு மண்டலம்)
தெற்கு மண்டலம்	கண்காணிப்பாளர் (தெற்கு மண்டலம்)	நிர்வாக அலுவலர் (தெற்கு மண்டலம்)	உதவி ஆணையாளர் (தெற்கு மண்டலம்)
மத்திய மண்டலம்	கண்காணிப்பாளர் (மத்திய மண்டலம்)	நிர்வாக அலுவலர் (மத்திய மண்டலம்)	உதவி ஆணையாளர் (மத்திய மண்டலம்)

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு உதவி பொதுத் தகவல் அலுவலர்கள், பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களை நியமித்து உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

22/10/26

பெறுநர்:

சம்மந்தப்பட்ட அலுவலர்கள்

நகல்

1. அனைத்து மண்டல உதவி ஆணையாளர்கள்,
2. அனைத்து துறை தலைமைகள்,
3. துணை ஆணையாளர்கள்,
4. ஆணையாளர் அவர்களின் மேசைக்கு,
5. மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
6. மாண்புமிகு மேயர் அவர்கள்.

Scanned with OKEN Scanner